# தமிழ் இணையக் கல்விக்கழகம்
(முந்தைய தமிழ் இணையப் பல்கலைக்கழகம்)

# Tamil Virtual Academy
(Erstwhile Tamil Virtual University)

டாக்டர் சந்தோஷ் பாபு இ.ஆ.ப. / Dr. Santhosh Babu I.A.S.
இயக்குநர் (மு.கூ.பொ.) / Director (FAC)

ந.க. எண். 200546/19/ க.த.பே./C1 | மடல்–01

பெறுநர்: | நாள்: 28.08.2019

முதல்வர்,
திருத்தங்கல் நாடார் கல்லூரி,
சென்னை

பொருள்: தமிழ் இணையக்கல்விக் கழகம் – கணித்தமிழ் பேரவை – 100 கல்லூரி / பல்கலைக் கழகங்களில் கணித்தமிழ் பேரவை தொடங்கிச் செயல்படுத்தல் – ஆதார நிதி ரூ. 25,000/– வழங்குதல் – கல்லூரி / பல்கலைக்கழக ஒப்புதல் – வங்கிக் கணக்கு விவரங்கள் கோருதல் சார்பு

பார்வை: 1. தமிழக அரசின் அரசாணை (ப) எண். 28 தகவல் தொழில் நுட்பவியல் (நிர்வாகம் –2) துறை, நாள். 04.07.2019

***

ஐயா / அம்மையீர்,

உலகின் ஆதி மொழிகளுள் ஒன்றான தமிழ் தன் தொன்மையான வேர்களுடன், தகவல் நெடுஞ்சாலையிலும் தன்பீடு நடையைத் தொடங்கிவிட்டது. கணினி உலகிற்கு மின்னஞ்சல் உட்பட பல அடிப்படைக் கண்டுபிடிப்புகளைத் தமிழர்கள் கொடையளித்து உலக சமூகத்தின் வளர்ச்சிக்குத் துணை நின்றுள்ளனர். உலகம் உள்ளங்கையில் சுருங்கி, நம் ஒவ்வொரு அலைபேசியும் இணையத்தின் வாசலைத் திறந்து, தகவல் தொழில் நுட்பவியல் உலகிற்கு நம்மை அழைத்துச் செல்கின்றது.

Anna University Campus, Gandhi Mandapam Road, Kottur, Chennai - 600025.
Tel. : 91-44-2220 9400, Fax : 91-44-2220 9405, E-mail : tva@tn.gov.in, URL : WW.tamilvu.org

அனைத்து மின்னணுக் கருவிகளிலும் தமிழின் பயன்பாட்டையும் அதன் வழி மக்களின் வாழ்வில் மேம்பாட்டையும் உறுதி செய்வது, நாம் இன்று முன்னெடுக்க வேண்டிய உடனடிப் பணியாகும். கல்வி நிறுவனங்கள், தமிழ் மன்றங்களின் வாயிலாக வளர் தமிழை வளர்த்தது போல், அனைத்து நிலைகளிலும் கணித்தமிழ் வளர்ச்சிப் பணிகளை முன்னெடுக்கும் பணிகளுள், மாணவர்களிடம் சேர்க்கும் ஒரு முதன்மைப் பணியே **"கணித்தமிழ்ப் பேரவை"**ஆகும்.

கணித்தமிழின் நல்வாய்ப்புகளையும், வளங்களையும் மாணவர்களுக்குச் சேர்க்கும் பணியைத் கணித்தமிழ்ப் பேரவைகள் செயல்படுத்தும். தமிழ் மென்பொருள் உருவாக்கம், பயன்பாடு, கணினியில் ஒருங்குகுறித் தமிழில் தட்டச்சு முதலான தமிழ்ப்பணிகளை முனைப்புடன் முன்னெடுக்க உள்ளது. கணித்தமிழ்ப் பேரவைகளின் நிலைத்த செயல்பாட்டைக் கருத்தில் கொண்டு அவற்றின் செயல்பாடுகளுக்கான **ஆதாரநிதியினையும்** வழங்க உள்ளது.

எனவே, தங்களின் கல்வி நிறுவனத்தில் கணித்தமிழ்ப் பேரவையைத் தொடங்கிச் செயற்படுத்த, கணித்தமிழில் ஆர்வமுள்ள, தமிழ்த்துறை, கணினித்துறை பேராசிரியரை துறைக்கு ஒருவர் என, இருவரை ஒருங்கிணைப்பாளராக நியமித்து (தமிழ்த்துறை இல்லாத பொறியியல் கல்லூரிகளில் கணினி அறிவியல் துறையில் இருவரை ஒருங்கிணைப்பாளராக நியமிக்கலாம்) அவர்களின் பெயர், மின்னஞ்சல், அலைபேசி ஆகிய விவரங்களையும் , **ஆதாரநிதியினை மின்னணு பரிவர்த்தனை** வழியாக வழங்குவதற்காக கல்லூரியின் பெயரில் உள்ள '**வங்கிக் கணக்கின் விவரங்களை**'யும் கடிதம் கிடைத்த 20 தினங்களுக்குள் tva@tn.gov.in என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும் கேட்டுக்கொள்கிறோம்.

கணித்தமிழ்ப் பேரவையின் வழிகாட்டு நெறிகளின்படி தங்களின் நிறுவனத்தில் கணித்தமிழ்ப் பேரவையை வழிநடத்தி, கணித்தமிழ் வளர்க்கவும், தகவல் நெடுஞ்சாலையில் கணித்தமிழின் இருப்பை உறுதி செய்யவும் விழைகின்றோம்.

"கணித்தமிழ்க் காப்போம்
காலத்தை வெல்வோம்"

ஒப்பம்
இயக்குநர்

// உண்மை நகல் //

28/8/19

இயக்குநருக்காக
முனைவர் ச. முருகப்பன், M.Tech.,Ph.D.
உதவி இயக்குநர்
தமிழ் இணையக் கல்விக்கழகம்
அண்ணா பல்கலைக்கழக வளாகம்
சென்னை-600 025.